IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.

MCOP No. 873/2022

**05.10.2023 – ம.சா.1 திருமதி. தனலட்சுமி** சத்திய வாக்குமூலத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு விபத்து 22.05.2020 ம் தேதி சங்கராபுரம் தாலுக் ஆபிஸ் முன்பாக உள்ள வேகத்தடை அருகே நடந்தது. விபத்து சம்மந்தமாக நான் தான் போலீசில் புகார் கொடுத்தேன். விபத்து காலை சுமார் 6.00 மணிக்கு நடந்தது. எனக்கு காலை 9.00 மணிக்கு தகவல் தெரிந்தது. நான் புகார் கொடுக்கும் போது நேரம் சுமார் 10.00 மணியிருக்கும். புகார் கொடுக்கும் போது எனது கணவரின் வயது 38 என்று குறிப்பிட்டேன். நான் விபத்து நடக்கும் போது ராயண்டபுரம் கிராமத்தில் வசித்து வந்தேன். தற்போதும் அந்த முகவரியில் தான் வசிக்கிறேன். எனது கிராமத்தில் கூலி வேலை பார்க்கிறேன் . எனது முகவரியை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரின் ஆதார் அட்டையில் என் கணவரின் வயது என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் எனக்கு படிப்பு அறிவு இல்லை என்பதால் தெரியவில்லை. குடும்ப அட்டையில் எனது கணவரின் வயது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பு அறிவு இல்லை என்பதால் தெரியவில்லை. என்னுடைய கணவரின் வயது ஆதார் அட்டை , குடும்ப அட்டை மற்றும் புகாரில் மாற்றி மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் எனக்கு எழுத படிக்க தெரியாததால் எனது மாமியார் குறிப்பிட்ட வயதை புகாரில் குறிப்பிட்டுள்ளேன். புகாரில் கண்டுள்ள விவரங்களை நான் தான் போலீசாரிடம் சொன்னேன். இந்த விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றும் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் காரணமில்லை என்று சொல்லி வழக்கை போலீசார் அபேட் செய்துவிட்டார் என்று சொன்னால் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் தான் விபத்திற்கு காரணம். நான் கொடுத்த புகார் பொய்யானது என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் அவர் ஓட்டிய ஆட்டோவிற்கு ஆர்.சி புத்தகம் , தகுதிசான்று இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 1ம்

எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை செலுத்தி திடீரென பிரேக் போடுவதற்கு வாய்ப்பேயில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது . ஓட்டுனர் உரிமம் பொய்யானது என்றும் ஆகவே அது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது எனது கணவரின் கவனக்குறைவு அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றும் ஆகவே இழப்பீடு கோர எங்களுக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல . எள் மூட்டைகளை திருவண்ணாமலையை விட கள்ளக்குறிச்சியில் அதிக விலைக்கு விற்களாம் என்று சொல்லி எடுத்து சென்றார். நாங்கள் விவசாயம் செய்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது கணவரின் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை . எனது கணவரை மருத்துவமனையில் யார் அட்மிட் செய்தார் என்ற கேட்டால் சங்கராபுரத்தை சேர்ந்த பாண்டியன் என்பவர் தான் ஆம்புலன்சில் எனது கணவரை ஏற்றிவிட்டார். பாண்டியனுக்கு விபத்து குறித்த விவரங்கள் தெரியும். போன் செய்த பிறகு தான் பாண்டியன் யார் என்ற விவரம் எனக்கு தெரிய வந்தது. பிறகு தான் பாண்டியனை நான் நேரில் பார்த்தேன். பாண்டியன் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அவர் எங்கள் தரப்பு பொய் சாட்சி என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.
MCOP No. 873/2022

**05.10.2023 – ம.சா.2 திரு. பாண்டியன்** சத்திய வாக்குமூலத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்து 22.05.2020 ம் தேதி காலை நேரம் சுமார் 6.00 மணியளவில் சங்கராபுரம் தாலுக் ஆபிஸ் முன்பு உள்ள வேகத்தடை அருகே விபத்து நடந்தது . நான் சங்கராபுரத்தை சேர்ந்தவன் ஆவேன் . என் வீட்டிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே சுமார் ½ கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் டெய்லியும் காலை 6 மணிக்கு விபத்து நடந்த இடத்தின் வழியாக நடைபயிற்சி செய்வேன் . நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . விபத்து நடந்த போது நான் சம்பவ இடத்தில் இருந்தேன் . முன்னால் சென்ற ஈச்சர் வண்டி திடீரென பிரேக் போட்டதால் பின்னால் வந்த இறந்தவர் ஓட்டி சென்ற ஆட்டோ மோதி விபத்து நடந்தது. இறந்தவர் கட்டுப்பாட்டை இழக்கவில்லை. முன்னால் சென்ற வாகனம் திடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது . இறந்தவர் அதிவேகமாக சென்றதால் பிரேக் போட இயலாததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல . இறந்தவர் வண்டியை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று அவராகவே விபத்தை வர வைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல . போலீசார் சம்பவத்தை பற்றி என்னை விசாரித்தார்கள். என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை . என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் இறந்தவரை நான் ஆம்புலன்சில் ஏற்றி விடவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் ஆம்புலன்சில் அமர்ந்து மருத்துவமனை செல்லவில்லை. ஆம்புலன்ஸ் தனியார் ஆம்புலன்ஸ் அரசு ஆம்புலன்சா என்று எனக்கு தெரியவில்லை . நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.